**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம்- II**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் II இன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்திட்டமானது 2001 பெப்ரவரி 20 இல் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் கீழ் கொழும்பு நகரத்தில் வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை மீதான விரிவான வடிவமைப்பு கற்கைக்காக ஜப்பான் யென் 580 மில்லியனிற்கு சமமான ரூபா 417 மில்லியன் தொகையான மானியத்துடன் தொடங்கப்பட்டது. மேலும், கொட்டாவை முதல் கடுவலை வரையான (கட்டம் -1) 12 கிலோமீற்றர் நெடுஞ்சாலை நிர்மாணிப்பதற்கு 2007 மார்ச் 28 இல் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேபிஐசீஏ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) இடையில் எஸ்எல்- பி89 ஆம் இலக்க முதலாவது கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எஸ்எல் பி91 ஆம் இலக்க இரண்டாவது 2008 யூலை 29 மற்றும் 2011 மார்ச் 22 இல் இலங்கை அரசாங்கம் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் எஸ்எல்பி 101 ஆம் இலக்க மூன்றாவது கடன் உடன்படிக்கை கடுவலை முதல் கடவத்தை வரையான (கட்டம் -II) 8.9 கிலோமீற்றர் நெடுஞ்சாலை நிர்மாணிப்பதற்கு 2011 மார்ச் 22 இல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்டிருந்தது. 2012 ஏப்ரல் 05 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் செய்யப்பட்ட வேண்டுகையில் வழங்கப்பட்ட முகாமைத்துவ சேவைகளின் 2012 ஏப்ரல் 25 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் தனியான செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு (பிஎம்யூ) தாபிக்கப்பட்டிருந்தது. ஆகவே, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் II இற்கான இந்த நிதிக்கூற்றுக்கள் புறம்பாக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் II இன் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பிராந்தியத்தில் வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்கில் கொழும்பு நகரத்திலிருந்து தெற்கு நெடுஞ்சாலை மற்றும் ஏனைய தேசிய வீதிகள் என்பவற்றுடன் இணைந்த கொழும்பின் வெளிப்புறத்தில் நெடுஞ்சலையை நிர்மாணிப்பதற்கும் அதன் மூலம் நாட்டின் ஏனைய பிராந்தியத்துடன் தொடர்பை உயர்த்துவதும் செயற்திட்டத்தின் நோக்கங்களாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 44,880 மில்லியனிற்கு சமமான ஜ.யென் 36,998 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 27,094 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 25,513 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. கட்டம் II இன் கீழான நெடுஞ்சாலையினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2008 மே மாதத்தில் தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டதுடன் 2012 ஏப்ரல் அளவில் 48 மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், கீழான நெடுஞ்சாலையினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் சீன மக்கள் குடியரசிமிருந்து ஒப்பந்தகாரருக்கு 2009 ஒக்தோபர் 22 இலேயே வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 மார்ச் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 66.7 பில்லியனாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்குவதும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 18,793,257,646 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 24,834,824,577 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 579,277 | 1,583,655 | 3,242,066 |
| காணி மற்றும் காணி முன்னேற்றம் | 144,879,973 | 820,137,996 | 1,661,691,368 |

| | | | |
|---|---|---|---|
| செயற்திட்ட முகாமைத்தவ செலவினம் | 54,403,206 | 96,630,020 | 160,036,875 |
| நிர்மாணக் கிரயம் | 18,238,660,551 | 4,123,658,531 | 22,372,272,209 |
| ஆலோசனை | 354,734,539 | 282,847,520 | 637,582,059 |
| | -------------------- | ------------------- | -------------------- |
| | 18,793,257,646 | 5,324,857,722 | 24,834,824,577 |
| | ========== | ========= | ========== |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பல சந்தர்ப்பங்களில் நிதிநிலமைக் கூற்றில் காட்டப்பட்ட தொகைகள் நேரொத்த தொகைகளுடன் உடன்பட்டிருக்கவில்லை. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் அத்தகைய குறைபாடுகளை செயற்திட்டம் இனங்கண்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுகள் இதன்படி திருத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீள்குடியேற்ற நடவடிக்கைகளிற்கான காணி சுவீகரிப்பிற்காக செலுத்தப்பட்ட இழப்பீடு ரூபா 1,516,444,923 ஆகும். எவ்வாறாயினும், இது நிதிக் கூற்றில் ரூபா 1,516,811,395 ஆக காட்டப்பட்டிருந்தது, ஆகையால் ரூபா 366,472 ஆன வித்தியாசத்தைக் காட்டுகின்றது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சிவில் நடைபெறும் வேலைகளில் ரூபா 18,792,678,370 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட நேரொத்த தொகைகள் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சலின் தவறான கணிப்பீடு காரணமாக ரூபா 24,115,952,439 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம், முற்பணம் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் மீதான வெளிப்பாய்ச்சல் ரூபா 3,635,400 ஆகும். எவ்வாறாயினும் நிதி நிலமைக் கூற்றுக்களின் பிரகாரம் இது ரூபா 3,638,400 ஆக காட்டப்பட்டது.

(ஈ) காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக பணவளிப்புச் செய்யப்பட்ட நிதிகள் ரூபா 11,012,776,383 ஆக காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி நிலமைக் கூற்றில் காட்டப்பட்ட நேரொத்த தொகைகள் ரூபா 10,740,594,665 ஆகும்.

(உ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூர் ஆலோசனையாளர்களிற்கு ரூபா 14,577,343 தொகையான செலுத்த வேண்டியவைகள் இரண்டு தடவை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஊ) இடைக்கால கொடுப்பனவு சான்றிதழின் பிரகாரம், ரூபா 1,822,010,292 கூட்டு மொத்தத் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்தாது. எவ்வாறாயினும் நிதிக்கூற்றின் பிரகாரம், இது ரூபா 3,635,672,999 ஆக காட்டப்பட்டது.

### 5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிலையான சொத்துக்களின் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிராததுடன் இதன் விளைவாக, மீளாய்வாண்டின் போது ரூபா 1,918,542 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டவை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிப் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு மற்றும் மீளாய்வாண்டு இறுதி வரை நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடன் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகைகள் | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.யென் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.யென் மில் | ரூபா மில் |
| ஜேஐசீஏ- கடன் பி91 | 25,513 | 27,094 | 10,256 | 10,255 | 7,798 | 22,488 |
| இலங்கை அரசாங்கம் | 11,485 | 17,786 | 389 | 389 | 503 | 1,161 |
| | 36,998 | 44,880 | 10,645 | *10,644 | 9,301 | 23,649 |

* ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டியவை உள்ளடக்கப்பட்டிராமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையுடன் இத்தொகை உடன்பட்டிருக்கவில்லை.

### 6.2 பௌதீக செயலாற்றல்

#### 6.2.1 அதிவேகபாதையின் கட்டம் II இன் பௌதீக செயலாற்றல்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், திருத்திய இலக்கிடப்பட்ட 68 சதவீதத்திற்கு எதிராக செயற்திட்டத்தால் அடையப்பட்ட உள்ளபடியான முன்னேற்றம் 44 சதவீதத்தில் இருந்தது. ஆதலால், உள்ளபடியான முன்னேற்றம் இலக்கிடப்பட்டதைவிட பின்தங்கியிருந்தது. நெடுஞ்சாலைகள், உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு செயலாளரின் விளக்கத்தின் பிரகாரம், பாறை விபரங்கள், கோவை இடைவெளிகளின் மீள்வடிவமைப்பு என்பவற்றின் மீதான முரண்கள் மற்றும் தற்காலிக பாலங்களிற்காக நீர்ப்பாசன திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தின் மீதான தாமதங்கள் போன்றவற்றின் மீதான எதிர்பாராதவிதமாக களனி பாலத்தின் மீதான பாலங்களின் நிர்மாணத்தில் அடைந்த தாமதங்கள் குறைவான செயலாற்றலிற்கான காரணங்களாக இருந்தது.

#### 6.2.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடுவல முதல் கடவத்தை வரையான (8 கிமீகள்) (கட்டம் II) வீதிப்பிரிவின் நிர்மாணத்திற்கு உரியதாகவிருக்கின்ற ரூபா 31.334 பில்லியன் பொறியியல் மதிப்பீட்டை ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 62.041 பில்லியன் கேள்விப் பெறுமதி விஞ்சியிருந்தது. அமைச்சரவை 2010 ஒக்தோபர் 06 இல் ஒப்பந்தம் வழங்கலை இரத்துசெய்வதற்கு தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், அமைச்சரவைத் தீர்மானத்திற்கு

முரணாக, மேற்குறிப்பிட்ட கேள்வி ரூபா 44.88 பில்லியன் கேள்வி விலையை குறைத்த பின்னர் 2011 நவம்பர் 25 இல் மீள கவனத்திற்கெடுக்கப்பட்டும் வழங்கப்பட்டிருந்ததும் என்று குறிப்பிடப்பட்டது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2011 நவம்பர் 25 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் அமைச்சரவை மேற்பார்வை ஆலோசனையாளர் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவால் பொறியியல் மதிப்பீட்டிற்கோ அல்லது இரண்டாவது கேள்வியாளர் பிரயோகிக்கப்பட்ட வீதங்கள் அனுமதிக்கப்பட்டிருக்காத போதிலும் இரண்டாவது கேள்விக்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பொறியலாளர் மதிப்பீடுகளின் பிரகாரம், ஆரம்ப செலவினங்களின் வகுதியின் கீழ் 15 மோட்டார் வாகனங்கள் மற்றும் 08 மோட்டார் சைக்கிள்கள் என்பன கொள்வனவு செய்வதற்கு ரூபா 120,728,000 கூட்டுமொத்தத் தொகையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த ஒதுக்கீடு 21 மோட்டார் வாகனங்கள் மற்றும் 12 மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாட்டுத் தொகைளிற்கான ஏனைய வகுதிகளின் கீழ் ரூபா 153.54 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், உள்ளபடியான தொகை ரூபா 32 மில்லியன் தொகையால் ஒதுக்கீட்டை விஞ்சியிருந்து ரூபா 185.62 மில்லியன் ஆக காணப்பட்டது.

(இ) ஒப்பந்தகாரரால் ஏற்பட்ட ரூபா 19,884,107 தொகையான பெறுமதி சேர் வரி பெறப்பட்ட கடன் பெறுகைகளில் செயற்திட்டத்தால் மீளளிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரர் மீளளிப்பதிலுள்ள தாமதங்கள் மீதான வட்டியாக ரூபா 6,900,740 தொகையும் கோரியிருந்தார்.

(ஈ) மேலதிக மண் மாதிரி பரிசோதிப்பதற்காக ஆரம்ப அளவீட்டு பட்டியலிலுள்ள ஏற்பாடு ரூபா 3.3 மில்லியனான போதிலும், ஒப்பந்தகாரர் ரூபா 50.49 மில்லியன் தொகையால் அந்த நடவடிக்கைக்கான ஆரம்ப ஏற்பாட்டை விஞ்சி ரூபா 53.79 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தார்.

(உ) 30 ஆம் இலக்க இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழின் பிரகாரம், 50 மிமீ டை ஜீஐ குழாய் வழங்கி பொருத்துவதற்காக குறைவான ஏற்பாட்டு ரீதியான தொகை வகுதியின் ஒப்பந்தகாரருக்கு ரூபா 159,173,175 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சொனி லொட்ஜிங் பரிசோதனைக்காக உதிப்பாகங்களின் அவசியமாக இருந்த துருப்பிடித்தல் பொருட்கள் வழங்குதல் மற்றும் பாய்ச்சலிடல் என்பவற்றின் விளைவாக குறைவான ஏற்பாட்டு தொகைகள் அளவீட்டு பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) மேலும், பொறியியலாளரின் மதிப்பீடுகளில் விடயம் இனங்காணப்படாமலோ அல்லது ஒப்பந்த விதப்புரைகளை அனுமதிக்கப்படாமலோ அளவீட்டுப் பட்டியலை விஞ்சி 182 சதவீதத்தால் குறைவான ஏற்பாட்டுத்தொகுதியாக வகுதி பீலி தரத்திற்கான சொனிக் பதித்தல் பரிசோதனைக்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 138.28 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(எ) ஒப்பந்த நிபந்தனைகளின் 60.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ரூபா 200 மில்லியன் பெறுமதியை விஞ்சியிருந்த இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மதிப்பாய்விற்காக கவனத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவேண்டும். எவ்வாறாயினும், ரூபா 143.5 மில்லியன் மற்றும் ரூபா 136.4 மில்லியன் பெறுமதியான 02 இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மதிப்பாய்வு நோக்கத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஏ) ஒப்பந்த நிபந்தனைகளின் 60.5 ஆம் உட்பிரிவின் பிரகாரம், பிடிகாசின் 10 சதவீதம் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்களிலிருந்து கழிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், 5 சதவீத பிடிகாசு இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்- 20 இலிருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் இதன்விளைவாக ரூபா 464.7 மில்லியன் ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

**6.2.3 ஆலோசனை ஒப்பந்தம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆலோசனைக்கான குறைநிரப்பு உடன்படிக்கையின் பிரகாரம், வதிவிடப் பொறியியலாளர், மின்னியல் பொறியியலாளர் மற்றும் திட்டமிடல் பொறியியலாளர் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக சேர்க்கப்பட வேண்டுமென பெறப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய பதவிகள் 2014 யூலை வரை வெற்றிடமாக இருந்தது.

(ஆ) மேலும், மூல ஆலோசனை உடன்படிக்கையின் கீழ் சேர்ப்பதற்கு வேண்டப்பட வேண்டியிருந்த 04 பொறியியலாளர்கள் 2014 யூலை வரை சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிர்மாண ஒப்பந்த குறிப்புரை இல. 102 இன் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளின் தொடக்கத்தில் ஆலோசனை பொறியியலாளர்களிற்கான அலுவலக மற்றும் வதிவிட வசதிகளிற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 287.01 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டதுடன் 2013 யூன் வரை அவற்றின் மீத ரூபா 163.30 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 1 ½ ஆண்டுகள் கடந்த பின்னர் வதிவிட வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நிபந்தனை இல. 49.4 இன் பிரகாரம், வதிவிட வசதிகள் வழங்கப்பட்டிருக்காத மாதங்கள் தொடர்புபட்ட தொகை குறைக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டுள்ளது. முழுக்காலத்திற்காகவும் ரூபா 71.16 மில்லியன் தொகையான கொடுப்பனவுகள் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 13 ஆலோசனையாளருக்கு வதிவிட வசதிகள் வழங்குவதற்கான வசதிகள் கிடைத்திருந்த போதிலும், அத்தகைய வசதிகள் 07 ஆலோசனையாளருக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. 2013 யூன் இலிருந்து ஏனைய ஆலோசனையாளருக்கு ரூபா 13,000 வீதம் மாதாந்தம் வழங்கப்பட்டிருந்தது.

**6.2.4. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கடன் செயற்பாட்டுத் திகதி 2009 மார்ச் மாதத்தில் இருந்தது. எவ்வாறாயினும் கடன் பெறுகைள் 2012 சனவரியிலிருந்து பணவளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இதன்விளைவாக, கடனளிக்கும் முகவருக்கு செயற்திட்டத்தால் ரூபா 29,402,050 தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பொது முயற்சிகள் திணக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 8.6 ஆம் பிவிவுகளிற்கு முரணாக ரூபா 1,478,514 தொகையான விடுமுறையை காசாக்கல் மற்றும் ரூபா 424,737 தொகையான மருத்துவ காப்புறுதிக்கான கோரிக்கைகள் மற்றும் ரூபா 3,501,406 தொகையான படிகள் செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட நோக்கங்களுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்காத ந்வடிக்கைகளிற்காக செயற்திட்டத்தால் ரூபா 21.2 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும், அத்தகைய கொடுப்பனவுகள் உரிய அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் நிர்மாண வேலை முரணால் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்டத்தால் நான்கு ஆலோசனையாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும், மீளாய்வாண்டின் போது அவர்களிற்கு ரூபா 6.84 மில்லியன் கூட்டு மொத்த தொகையான வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்புரைகளின் பிரகாரம், அவர்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை

**6.2.5. காணிச் சுவீகரிப்பு மீள்குடியேற்ற நடவடிக்கைகளும்**

--------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றத்திற்காக 1.3286 ஹெட்டெயர் பரப்பளவுள்ள காணி சுவீகரிப்பதற்காக 2013 திசெம்பர் 31 வரை ரூபா 1,661.7 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலவழித்திருந்தது. மேலும், செயற்திட்ட நடவடிக்கைகளின் காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் 2013 திசெம்பர் இறுதிவரை பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. நெடுஞ்சாலையின் கட்டம் II இன் கீழ் 94 சதவீத காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 70 சதவீத மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

**6.2.6. மனிதவள முகாமைத்துவம்**

----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.4 மற்றும் 2.2.7 ஆம் இலக்க பந்திகளின் பிரகாரம் பதவியணியினர் சேர்ப்பனவுக்காக தேசிய புதினப்பத்திரிகைகள் ஊடாக விண்ணப்பங்கள் கோரல் செய்யப்பட வேண்டியதுடன் மூன்று ஆண்டுகளை விஞ்சாத காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக செயற்திட்ட பதவியணியின் சகல உறுப்பினர்களும் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு முரணாக தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் செயற்திட்டத்திற்காக 35 பதவியணியினை அனுமதித்திருந்த போதிலும், 24 மாத்திரம் செயற்திட்டத்தால் வேண்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வான்டின் போது 11 பதவிகள் வெற்றிடமாக இருந்தது.

**6.2.5 மோட்டார் வாகனங்களின் பாவனை**

--------------------------------------------------

செயற்திட்டத்தின் வாகன அணியானது செயற்திட்ட 05 வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்கள் மற்றும் ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட 04 வாகனங்கள் என்பவற்றினைக் கொண்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 திசெம்பர் 20 ஆந் திகதிய 33(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மோட்டார் வாகன வசதிகளை பெறுவதற்கு தகுதியற்றிருந்த உத்தியோகத்தர்களிற்கு 06 மோட்டார் வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது.